இங்கிலாந்து நாட்டில் சற்றுத் தாமதித்தபின், ஜான் ஹைடு 1911 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8 ஆம் தேதியன்று அமெரிக்காவிலுள்ள நியூயார்க் மாநிலத்திலுள்ள கிளிப்டன் ஸ்பிரிங்ஸ் (Clifton Springs) என்ற இடத்துக்கு விசேஷ சிகிச்சைக்காக அழைத்துச்செல்லப்பட்டார்.

இந்தியாவை விட்டுச் செல்வதற்கு முன்பே அவர் ஒருவித பயங்கரமான தலைவலியினால் பாதிக்கப்பட்டார். தாங்கக் கூடாத இந்த உபாதைக்குச் சரியான சிகிச்சையளிப்பதற்கு இந்தியாவில் நவீன மருத்துவ வசதிகள் அப்போது இல்லை. எனவே நோயின் அகோரம் தீவிரமடைந்து அவர் தலைநோவினால் சொல்லொண்ணாப் பாடுபட்டார்.

கிளிப்டன் ஸ்பிரிங்ஸ் மருத்துவமனையில் அவருடைய மண்டைக்குள் கட்டியொன்று வளர்ந்து வருவது கண்டுபிடிக்கப்பட்டது. அது உடனடியாக அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்ட போதிலும், அதிலிருந்து புற்று நோய்க்குரிய அறிகுறிகள் உள்ளே பரவிவருவது கண்டுபிடிக்கப்பட்டது. தீவிர மருத்துவ பரிசோதனைக்குப்பின் அவருக்கு ஏற்பட்டிருந்தது சார்கோமா (Sarcoma) என்ற கொடிய புற்று நோய் என்பதை, சம்பந்தப்பட்ட மருத்துவர் கண்டு பிடித்து அறிவித்தார்.

இவ்வித நோய்க்கு அதுவரையில் வைத்தியத் துறையில் சரியான பரிகாரம் கண்டுபிடிக்கப்படாத காலம் அது. அறுவை சிகிச்சையில் இருந்து ஒருவாறு பலன்பெற்று எழுந்த ஜான் ஹைடு அங்கி

ருந்து டிசம்பர் மாதம் 19 ஆம் தேதி, நார்த்தாம்ப்டன் நகரிலுள்ள தம் சகோதரி மேரி மென்சல் (Mrs.E.H. Mensel) அம்மையாரின் இல்லத்துக்குச் சென்று அவர்களின் பராமரிப்பில் இருந்தார்.

நோயின் அகோரம் சற்று தணிந்ததுபோல் முதலில் காணப்பட்டது. ஆனால் புத்தாண்டு 1912 ஜனவரியில் அவருக்கு முதுகிலும், உடலின் பக்கவாட்டிலும் அதிகமான வலிதோன்றியது. ஹைடு தனக்கு வாதநோய் (Rheumatism) ஏற்பட்டிருப்பதாக நினைத்தார். ஆனால் அவருடைய டாக்டருக்கு அது மேலும் தீவிரமாக ஹைடுவின் உடலில் பரவி வந்த சார்கோமா என்ற கொடிய புற்றுநோய் என்பது திட்டமாகப் புலப்பட்டது.

அவர் 1912 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் தேதி அமைதியாக மறுமைக்குள் பிரவேசித்தார். அவருடைய சகோதரன் வில் ஹைடு என்பவரும், சகோதரி மேரி அம்மையாரும் இல்லியனாய் (Illinois) மாநிலத்தில் கார்தேஜ் (carthage) நகரில் தங்கள் குடும்பத்துக்குச் சொந்தமான பழைய வீட்டுக்கு ஜான் ஹைடுவின் உடலை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தனர்.

அங்கே அவர்களின் தந்தை பதினேழு ஆண்டுகள் சிறப்புடன் திருப்பணியாற்றிய ஆலயத்தில் அடக்க ஆராதனை நடைபெற்றது. ஆராதனை நடத்திய அந்தச் சபைக்கு குருவானவராகிய அருள்திரு. ஜே.எப்.யங். (Rev.J.F.Young) என்பவர், பக்தன் ஜான் ஹைடுவின் இளவயதில் பள்ளியில் சகமாணவனும், அவருக்கு நெருங்கிய, அன்புக்குரிய சிநேகிதருமாவார்.

ஆலயம் முழுவதும் சபையாரும், அநேகம் திருப்பணியாளர்களும் கூடியிருக்க, எல்லாரும் அங்கே வைக்கப்பட்டிருந்த ஆண்டவரின் தாசன் ஜான் ஹைடுவின் சரீரம் மெலிந்து தளர்ச்சியுற்றதாகக் காணப்பட்ட போதிலும் அவருடைய முகத்தில் ஓர் அலாதியான களையும், இனிமையும், சமாதானத்தின் நிறைவும், தளராத மனஉறுதியும் பிரதிபலிப்பதைக்கண்டு பரவசமுற்று, ஜெபநிலையில் இருந்து ஆண்டவரைத் துதித்துப் போற்றினார்கள், குருவானவர் சிறப்பான அருளுரை ஆற்ற, கூடியிருந்த எல்லாரும் ஒருமனப்பட்டவர்களாய்த் தூய ஆவியானவரின் பிரசன்னத்தை உணர்ந்தனர்.

பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதியாகிய அந்நாளில் கடும் குளிராகவும், வானம் மேகம் சூழ்ந்து, மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது. ஜெபவீரன் ஜான் ஹைடுவின் சடலம் இயற்கை எழில் நிறைந்த மாஸ் ரிட்ஜ் (Moss Ridge) என்ற இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அவருடைய தந்தை, தாயார் மற்றும் அவருடைய சகோதரன் எட்மண் (Edmund) ஆகியோரின் கல்லறைகளுக்கருகில் ரட்சகர் கிறிஸ்தேசு நமக்களித்துள்ள உயிர்த்தெ லின் நல்நம்பிக்கையுடன் அடக்கம் செய்யப்ப

வானத்தின் மேகங்கள் சிறிது சிறிதாகக் கலை ஆரம்பித்தன. அந்த இறுதி ஆராதனையில் பங் பெற்ற மற்றொரு திருப்பணியாளர், "இந்த மேக ளும், நிழல்களும் பறந்தோடிப் போகும். கல்லை யின் அந்தகாரமும், நிசப்தமும் விரட்டியடிக்கப்ப இந்த வீரன்—ஜெபம், துதி, ஸ்தோத்திரம் இ றையே தன் காலம் முழுவதும் தன்னுடைய ஜீவ மாகக் கொண்டிருந்த இந்த அற்புத மனிதர் ஜா ஹைடு—மரணக் கட்டுகள் அவிழ்க்கப்பட உயிர்த்தெழுந்த தேவகுமாரன் கிறிஸ்து இரட்ச சாயலில் குதித்தெழும்புவார்" என்று கூறியி கிறார்.

ஜான் ஹைடுவின் குணாதிசயங்களில் மி சிறப்பாகக் கூறப்பட வேண்டியது அவருடை வாழ்க்கையில் காணப்பட்ட பரிசுத்த தன்மை தூய்மை—ஆகும். ஜெபத்தையும் ஜெபசிந்தை யுமே அவர் தன் வாழ்க்கையின் பணியாகத்தெரி கொண்டிருந்தார். அவர் அநேக ஆத்துமாக்களை தம் பரம எஜமானுக்காக ஆதாயப்படுத்தினார் எ பது மறுக்க முடியாத உண்மையே.

ஆனால் அவருடைய ஜெப ஜீவியமும், ஆ தும மீட்புப்பணியும் அவருடைய வாழ்க்கை பரிசுத்த தன்மையையே அஸ்திபாரமாகக் கொ ருந்தது. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக் வான்கள்; அவர்கள் மட்டுமே தேவனைத் தரிசி கள் என்று ஆண்டவர் கூறியிருக்கிறார். இந்த வே கம வசனத்தை ஆதாரமாகக் கொண்டே நாம், பரி தமில்லாத எவனும் ஓர் சிறந்த ஆத்தும மீட்பாள (Soul winner) இருப்பது அசாத்தியம் என துணிந்து கூறலாம்.

ஜான் ஹைடு திருச்சபை ஊழியர்களிடம் அ கடி வற்புறுத்திச் சொல்லி வந்த அறிவுரை, " னையே மையமாகக் கொண்ட 'நான்', 'தான்' எ மனப்பான்மை மரிக்க வேண்டியது மாத்திரம அது கண் பார்வைக்குத் தெரியாதபடி அடக் பண்ணப்பட வேண்டும். அடக்கம் பண்ணப்ப சுயஅடிப்படை ஜீவியத்தின் (self life) துர்க்க ஆத்துமாக்களைக் கிறிஸ்துவைவிட்டு அப் துரத்தியடிக்கும்" என்பதாகும்.

அவர் பரிசுத்தம் பெறுதலைப்பற்றிய தம் சொ அனுபவங்களைப்பற்றி அதிகம் பிரசங்கித்த தெரியவில்லை, பரிசுத்தம்பண்ணப்பட்ட வா கையை அவரே நடைமுறையில் வாழ்ந்து கா

அவருடைய ஜீவியமே அவரைப் பார்ப்பவர்க கு அருளுரையாகக் காணப்பட்டது. அதைப் லவே அவர் ஜெபத்தையும், ஜெப ஜீவியத்தின் கியத்துவத்தைப்பற்றியும் அதிகம் பேசிய லை; அவற்றைப்பற்றி நீண்ட அருளுரைகள் றவில்லை. அவர் வாழ்க்கையே இடைவிடாது நிலையில் இருந்த வாழ்க்கையாக அமைந்தி தை மக்கள் பிரத்தியட்சமாகக் கண்டனர்.

அவர் ஜெபித்தார்; பரம கிருபாசனத்தண்டை ஆத்துமாக்களின் மீட்புக்காகப் பெருமூச்சுகளு தன்னுடைய ஜெபங்களையும், பரிந்துபேசு யும், மன்றாட்டுகளையும் ஏறெடுத்தார். இயேசு ஸ்துவின் இரத்தம் நம்மைக் கழுவி, எல்லாப் வங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்க வல்லது உண்மைக்கு அவருடைய வாழ்க்கையே மிகச் த சாட்சியாக இருந்தது.

பக்தன் ஜான் ஹைடுவின் அகால மறைவு ல உலக திருச்சபையனைத்தையும் மிகுந்த த்தில் ஆழ்த்தியது. திருச்சபை மக்களும், தலை களும், திருப்பணியாளர்களும் அவருக்காக வெகு கணகலங்கித் துக்கித்தார்கள். மறைந்த இந்த வீரனைப்பற்றி அப்போது பேசப்பட்ட, எழுதப் புகழுரைகள், பாராட்டுகள், அநுதாபச் செய்தி அனைத்தும், அவருடைய பரிசுத்தம் நிறைந்த க்கையையும், தன் பரம எஜமானுக்காகவும் ரின சிதறுண்ட ஆடுகளாகிய மக்களின் மீட்புக் வும் அவர் ஆற்றிய அரும்பணியையும், தியாகத் மைபற்றி வல்லமையான சாட்சி பகர்வனவாயி ன.

குறிப்பாக, இந்த மாவீரனின் வாழ்க்கையைப் உள்ளப்பரவசத்துடனும், நன்றிப் பெருக்குட ஆக்ஸ்போர்டு அத்தியட்சாதீனத்தின் அப்போ பேராயர் (The Bishop of Oxford) கூறிய வார்த் களை இங்கே எடுத்துரைப்பது நல்லது. "சிக்கல் நிறைந்த இம்மனித வாழ்க்கையில் சுயநலத்தை சுயவிருப்பங்களையும் அறவே விட்டொழித்த தனி மனிதனிலிருந்து புறப்பட்டு, மானசீகமாய் sterious) சுயமாய் உணரப்படாமல், அளவிட யாத நிறைவுடனும் வல்லமையுடனும் செய வும் சக்திக்கு ஈடான சக்தி வேறொன்றில்லை."

பாத்திலிருந்தே அருளப்படும் இந்த வல்ல கு உகந்த பாத்திரமாக ஜான் ஹைடு இருந்தார். வருக்கே அவர் ஆற்றிய சாதனைகளின் இரக இதுவே. தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டு ஜெபிக்கும்போது, பெருமளவில் மக்கள் தங் உள்ளங்களில் அசைவுபெற்றனர். முழங்கால்கள் முடங்கின. பரிசுத்த ஆவியானவர் பேசினார்.

(தொடரும்)

வேத பாடம்

சாலொமோனின் உன்னதப்பாட்டு

பாடம் 9

தொடர்ச்சி

(உன்னதப்பாட்டு 2:14-15)

14 ஆம் வசனம்

"கன்மலையின் வெடிப்புகளிலும், சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே!" (உன்.2:14).

மணவாளன் மணவாட்டியை ஒரு புறாவுக்கு ஒப்பிட்டு அழைப்பதை இங்குக் காண்கிறோம். மணவாட்டியின் கண்கள் புறாக்கண்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளதை நாம் ஏற்கனவே கற்று அறிந்துள்ளோம். இங்கு நேசர் மணவாட்டியை, "மறைவிடங்களில் தங்குகிற புறா" என்று மெச்சிப் பாராட்டுவது குறிப்பிடத்தக்கது. பரிசுத்த வேதாகமத்திலே புறாவின் அநேக குணாதிசயங்களைக்குறித்துக் காணமுடியும். அவற்றுள் சிலவற்றை இச்சம்பவத்தின் பின்னணியில் ஒப்பிட்டுக் காண்போம்.

புறா, ஓர் இளைப்பாறும் பறவை; அது புலம்புகிற பறவை; கபடற்ற பறவை; கன்மலையின் வெடிப்புகளிலும், சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற பறவை. இவற்றின் விளக்கத்தைக் காண்போமா?

"அப்பொழுது நான்: ஆ, எனக்குப் புறாவைப் போல் சிறகுகள் இருந்தால், நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்" (சங்.55:6).

இளைப்பாறுதலைப் பெற்று அநுபவிக்கும் புறாவைக்குறித்து இங்குக் காண்கிறோம். இச்சங்கீதத்தின் முதல் ஐந்து வசனங்களை வாசிக்கவும். துன்மார்க்கரின் இடுக்கண், பழிசாட்டும் பகைவரின் செயல், தாவீதுக்கு ஏற்பட்ட மரணத்திகில், பயமும் நடுக்கமும் உண்டானதால் இருதயத்தில் ஏற்பட்ட வியாகுலம், அவனை மூடும் அருக்களிப்பு இவை அனைத்தும் தாவீதுக்கு ஏற்பட்ட சஞ்சலங்கள் ஆகும். அந்நேரங்களில் தாவீது ஒரு தனிமையான இடத்திற்குச் சென்று, இளைப்பாறும் புறாவுக்கு ஒப்பாக வாழவிரும்பினான்.

சபை விசுவாசிகளும் இவ்விதமான தாங்கமுடியாத அழுத்தங்கள், துக்கங்கள் வழியாகக் கடந்து செல்லநேரும். விசுவாசிகள் இவற்றில் அவ்விதமே மூழ்கிக் கிடக்கவேண்டிய அவசியமில்லை. மண

வாட்டி எப்போதும் இளைப்பாறுதலைப் பெற்று அநுபவிக்கும் புறாவுக்கு ஒப்பானவள் அன்றோ?

"நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறின மணவாளனாம் இயேசுவின் அன்பில் மூழ்குங்கள். இடுக்கண்களை உதறித் தள்ளி, இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

"நமுட்டைப்போலும், தகைவிலான் குருவியைப்போலும் கூவினேன், புறாவைப்போல் புலம்பினேன்; ..." (ஏசாயா 38:14).

"நாங்கள் அனைவரும் கரடிகளைப்போல உறுமி, புறாக்களைப்போலக் கூவிக்கொண்டிருக்கிறோம், ..." (ஏசாயா 59:11).

காட்டுப் புறா துக்கித்துப் புலம்பும் தன்மையுடையது. காட்டுப் புறாவின் இவ்விதச்சத்தத்தை அநேகரும் கேட்டிருக்கக்கூடும். இது அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக விசுவாசிகள் துக்கித்துப் புலம்பவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. அன்பானவர்களே! இன்று உங்களில் எத்தனை பேர் நரகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் மக்களுக்காக அழுது புலம்புகிறீர்கள்?

"உம்முடைய வேதத்தை மனுஷர் காத்துநடவாதபடியால், என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது" (சங்.119:136).

இயேசு கிறிஸ்துவை அறிந்தும், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல் நெறிதவறி வாழும் விசுவாசிகளுக்காக அழுது புலம்பும் தன்மைக்கும் இது ஒப்பனை. இன்று எத்தனை பேருக்கு இவ்வித அநுபவமுண்டு?

விசுவாசிகள் நெறிதவறும்போது, அவர்களைத் தரக்குறைவாக எண்ணி, மற்றவர்களிடம் குறை காணும் தன்மை சபைமக்களிடம் காணப்படக்கூடாது. இவர்கள் நன்கு தேறின விசுவாசிகள் அல்லர். வழிதவறும் விசுவாசிகளை நேசித்து, அவர்களோடு பட்சமாகப்பேசி, அன்னாரை வேதவசனங்களின் வாயிலாகச் சீர்திருத்தவேண்டியது மணவாட்டியின் கடமை. அதுவே காட்டுப் புறாவின் குணாதிசயம். அவர்களுக்காக உங்களது கன்னங்களில் கண்ணீர் தாரை, தாரையாக வடியவேண்டும். இதுவே மணவாட்டியின் அநுபவம்.

"எப்பிராயீம் பேதையான புறாவைப்போல் இருக்கிறான், ..." (ஓசியா 7:11).

"பேதையான புறா" என்பது கபடற்ற புறாவின் தன்மையைக் குறிக்கும். வேறெந்த பறவைக்கும் மணவாட்டி ஒப்பிடப்படாமல், புறாவுக்கு ஒப்பி பட்டுள்ளது முக்கியத்துவம் வாய்ந்தது. கப உன்னத குணாதிசயம் இயேசுவினிடத்தில்ம காணப்படுகிறது.

"ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகி போல, இதோ நான் உங்களை அனுப்புகிறே ஆகையால், சர்ப்பங்களைப்போல வினாவுள்ள ளும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களு இருங்கள்" (மத்.10:16).

"புறாக்களைப்போலக் கபடற்றவர்களு இருங்கள்" என்று இயேசுவே இங்குக் கூறியுள் காண்க. இதில் இயேசுதான் நமக்கு முன்மாதி விசுவாசிகள் இயேசுவைப்போன்று கபடற்ற ளாய் வாழ்தல்வேண்டும்.

"பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லா ரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களி உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதா ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" (எபி.7:2

கரைதிறையற்றவரும், குற்றமற்றவரும், டற்றவருமான மணவாளனாம் இயேசு தம் போலுள்ள சுபாவத்தைப் பெற்றுவாழும் மண டியைத்தான் விரும்புகிறார்.

"கோணலும் மாறுபாடுமான சந்ததியின் விலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், ளுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படி (பிலி.2:15),

கோணலும் மாறுபாடுமுள்ள வழிகளில் கும் மக்களின் மத்தியில்தான் விசுவாசிகள் வா வருகின்றனர். இவர்கள் நடுவே குற்றமற்றவர் மாசற்றவர்களும், கபடற்றவர்களுமாய் வா விசுவாசிகள் அழைக்கப்பட்டுள்ளனர். இது காட்டுப்புறாவின் தன்மையுமாகும். இயேசு கி வும் காட்டுப்புறாவின் சுபாவத்துக்கு ஒத்தவர் அதனால் காட்டுப் புறாவைப்போன்றுள்ள க தன்மையைப்பெற்று, தம் மணவாட்டி வாழ டும் என்று மணவாளன் வாஞ்சிக்கிறார்.

"கன்மலையின் வெடிப்புகளிலும் சிகர மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே!" (உ 2:14). காட்டுப்புறா கன்மலை வெடிப்பு சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்கி தன்மையுடையது. ஆம், மணவாட்டி கன்ம வெடிப்புகளில்தான் காணப்படவேண்டும்.

"... அந்தக் கன்மலை கிறிஸ்துவே" (1 கொ 10:4).

'கன்மலை' என்பது கிறிஸ்து இயேசுவைக் குறிக்கின்றது. மணவாட்டி எப்போதும் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறவளாய்க் காணப்படுதல்வேண்டும். மணவாட்டி சபையாகிய கட்டடத்தின் மூலைக்கல் இயேசு கிறிஸ்து என்பதை அனைவரும் அறிய வேண்டும். இயேசு கிறிஸ்து பேதுருவிடம் கூறும் போது, *"இந்தக் கன்மலையின்மேல் என் சபையைக் கட்டுவேன்"* (மத்.16:18) என்றார். இங்கு அவர் பேதுருவையல்ல, தம்மையே கன்மலைக்கு ஒப்பிட்டுப் பேசினார் என்பது தெளிவு. பேதுரு கன்மலை அல்ல; காணும் ஒரு சிறு குன்றுதான் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்களாக.

இயேசு கிறிஸ்துவின் கைகளிலும், கால்களிலும், விலாப்புறத்திலும் காணப்படும் காயங்கள் கன்மலையின் வெடிப்புகளுக்கு ஒப்பனை. விசுவாசிகள் இயேசுவின் காயங்களுக்குள் எப்போதும் காணப்படவேண்டும். இது சிலாக்கியம் பெற்ற ஓர் அநுபவமாகும்.

"சிகரங்களின் மறைவிடங்களில் தங்கும் புறா" என்றும் இயேசு கிறிஸ்து தம் மணவாட்டியை அழைக்கின்றார். ஆம், சபை கிறிஸ்துவாகிய சிகரத்தின் மறைவிடங்களில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறது. *"உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது"* (கொலோ.3:3) என்று வேதம் கூறுகிறது. உலகில் வாழும் மற்ற மக்களது ஜீவன் கிறிஸ்துவுக்குள் மறைத்து வைக்கப்படவில்லை. விசுவாசிகள்தான் இவ்விதச் சிலாக்கியம் பெற்றவர்கள். கிறிஸ்துவாகிய சிகரத்திற்குள் நம்முடைய ஜீவன் இருப்பதால் நாம் மிகுந்த பாதுகாப்பிற்குள் காணப்படுகிறோம். பேராபத்து ஒன்றும் மணவாட்டிக்கு ஏற்படாது.

அன்பான விசுவாசிகளே! **நீங்கள் எவ்விடத்தில் காணப்படுகிறீர்கள்? கிறிஸ்துவின் காயங்களுக்குள், அவரது ஜீவனின் மறைவுக்குள், பாதுகாப்பிற்குள் மறைந்து** காணப்படுகிறீர்களா? ஆராயவும்.

"...என் ஆத்துமா மறைவிடங்களில் உங்கள் பெருமையினிமித்தம் துக்கித்து, கர்த்தருடைய மந்தை சிறைப்பட்டுப்போனதென்று என் கண் மிகவும் அழுது கண்ணீர் சொரியும்" (எரே.13:17).

"சிகரங்களின் மறைவிடங்கள்" என்பதற்கு இன்னுமோர் பொருளும் உண்டு. மணவாட்டி கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து, உலக மக்களின் இரட்சிப்புக்காகத் துக்கித்து, அழுது, கண்ணீர் சிந்தவேண்டும் என்பதாம்.

"சிகரங்களின் மறைவிடம்" என்பதை, பரமேறிச் செல்லும் ஓர் அநுபவம் என்று சில வேதவிற்பன்னர்கள் கூறியுள்ளனர். எழுத்தின்படியாகப் பரலோகத்திற்குச் செல்லும் அநுபவம் அல்ல இது; கிறிஸ்தவ வாழ்க்கையில் உயர்ந்து வளருகிற அநுபவமே இது. மலைகளில் அங்காங்கே சிகரங்கள் காணப்படும்; அதிலே சிற்சில இடங்கள் மிகவும் உயர்ந்து காணப்படும். அவ்விதமுள்ளதொரு உச்சநிலைக்கு மணவாட்டியின் வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் உயர்ந்து, வளர்ந்து காணப்படுதல் அவசியம் என்பது இதன் பொருள்.

'சிகரங்களின் மறைவிடம்' என்பது அழிந்து போகும் மனிதனுக்கு எட்டமுடியாத ஒன்று. மக்களில் ஒரு சிலர் அதில் தவழ்ந்து, தவழ்ந்து, ஏறி அதனை எட்டிப்பிடிக்கின்றனர். அதுபோல, மணவாட்டியின் வாழ்க்கை, மனிதனது அறைகூவலுக்கும் மேம்பட்டு, பாடுகளையும் உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்து, உயர்ந்த வாழ்க்கையாக அமையவேண்டும் என்று மற்றுமோர் வேதாகம வியாக்கியானம் கூறுகிறது.

"உன் முக ரூபத்தை எனக்குக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும்; உன் சத்தம் இன்பமும், உன் முகரூபம் அழகுமாயிருக்கிறது" (உன்.2:14).

மணவாட்டியின் முகரூபமும், அவளது சத்தமும் கன்மலை வெடிப்புகளிலிருந்து அதாவது, நேசரின் காயங்களிலிருந்து வெளிப்படவேண்டும் என்பதை இவ்வசனம் விளக்குகின்றது. எத்துணைக் கோரமான பாடுகளை இயேசு கிறிஸ்து சகித்தார்! அவரது சரீரம் உழப்பட்ட நிலம்போலவும் அவரது காயங்கள் இரத்தத்துடன் சிவந்தும் காணப்பட்டன வன்றோ! நேசரின் பாடுகளாகிய வெடிப்புகளிலிருந்து மணவாட்டியின் முகரூபம் உருவாக்கப்படவேண்டும்.

நேச மணவாளனாம் காயங்களினாலே உருவாக்கப்பட்டு, சீராக்கப்பட்டு, நேசரது அன்பின் தோற்றத்தைப் பிரதிபலிக்கும் முகரூபத்தை மணவாட்டி பெற்றிருத்தல்வேண்டும். விசுவாசிகளின் வாழ்விலே அத்தகைய தோற்றத்தையே நேசர் எதிர்பார்க்கிறார். கோபமுகத்தையல்ல, குரூரமுகத்தையுமல்ல. அன்பும், சாந்தமும், சகிக்கும் தன்மையோடு கூடிய மகிழ்ச்சியையும், மனரம்மியத்தோடுகூடிய முகரூபத்தையும் விசுவாசிகள் வெளிப்படுத்திக் காட்டவேண்டும்.

அன்பானவர்களே! இன்றும், சில விசுவாசிகள் எத்தனை நாட்கள் உபவாசித்து ஜெபித்தும் அவர்களது முகரூபம் மாறுகிறதில்லை; அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி, இனிமை, சாந்தம் காணப்படுவதே இல்லை. மாறாக, கொடூரமான முகத்தோற்றத்தைப்

பிரதிபலிக்கின்றனர். கிறிஸ்துவின் காயங்களில் தாங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை இவ்விசுவாசிகள் மறந்துபோகின்றனர் போலும்!

''உன் சத்தம் இன்பமானது'' என்றார் மணவாளன். மணவாட்டி சபைக்கு இரண்டு வித சத்தம்—தொனி—உண்டு. அவை வேண்டுதலின் தொனி; நன்றியைத் தெரிவிக்கும் ஸ்தோத்திரத்தொனி ஆகும்.

''கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார்'' (சங்.28:6).

''ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்குஞ்சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள்'' (சங்.66:8).

மேற்காணும் வசனங்களில், *''விண்ணப்பங்களின் சத்தம்''*, *''துதிக்குஞ்சத்தம்''* என்னும் வாசகங்களைக் காண்கிறோம். மணவாளனாம் இயேசு விசுவாசிகளின் ஜெபத்தொனியையும், துதிக்கும் தொனியையும் கேட்க விரும்புகிறார். **விசுவாசிகள் அவரை நோக்கி ஜெபித்து, துதித்துப் போற்றுவார்களாக.**

அன்பான விசுவாசிகளே! "உன்னுடைய ஜெபத்தையும், ஸ்தோத்திரத்தையும் நான் மெச்சிப் பாராட்டுகின்றேன்; உன்னில் பிரியமாய் மகிழுகிறேன்'' என்று நேசமணவாளன் கூறுகிறார்.

''உன் முகரூபம் அழகுமாயிருக்கிறது என்றார்'' மணவாளன் (உன்.2:14).

*''இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, **எங்கள் இருதயங்களிலே** பிரகாசித்தார்''* (2 கொரி.4:6).

தேவனுடைய மகிமையின் ஒளி இயேசுவின் முகத்தில் காணப்பட்டது. இதனை விசுவாசிகளாகிய உங்களது இருதயங்களிலே பிரகாசிக்கப்பண்ணினார் தேவன். ஆம், நீங்கள் யார்? மண்பாண்டங்களே! எனினும், இது உங்களுக்குள் காணப்படும் ஒரு பொக்கிஷம் என்று பவுல் அப்போஸ்தலன் கூறியுள்ளார். தேவனுடைய மகிமையானது உங்களுடைய முகத்தில் பிரதிபலிக்குமானால், அது அழகு பொருந்தியதாய்க் காணப்படும். உங்களுடைய முகரூபத்தின் அழகு உங்களது ஜெப வாழ்க்கையைப் பொருத்தே அமையும்.

''அவர் ஜெபம்பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று, அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது'' (லூக்கா 9:29).

இயேசு கிறிஸ்து உயர்ந்த மலைக்கு சென்று ஜெபித்தவேளையிலே அவரது முக மாறிற்று. அவருடைய வஸ்திரம் வெண்மை பிரகாசித்தது. ஏன்? அவர் தேவனோடு ஜெபி கொண்டிருந்ததால்.

பழைய ஏற்பாட்டில் மோசே 40 நாட்கள் மலையில் தேவனோடு ஜெபித்துக்கொண்டிரு போது அவனுடைய முகரூபம் அழகாய், பிரகாச மாறிற்று; ஜனங்கள் அவனைப் பார்க்க பயந்த

ஆம், தேவபிள்ளைகளே! விசுவாசிகளா நாம் மணவாளனுடைய அடிச்சுவடுகளைப் பற்றவேண்டும். அழகான மணவாளனுக்கு அழ ஒரு மணவாட்டி தேவை. ஆகவே, உங்களது ஜெ வாழ்க்கையைச் சற்று ஆராய்வீர்களாக.

உங்களுக்கு அழகு வேண்டுமா? உங்க டைய ஜெப வாழ்க்கையைப் புதுப்பியுங்கள். தே உங்களில் மகிழுவார்.

15 ஆம் வசனம்

''திராட்சத்தோட்டங்களைக் கெடுக் குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடி கள்; நம்முடைய திராட்சத்தோட்டங்கள் பூ பிஞ்சுமாயிருக்கிறதே'' (உன்.2:15).

இவ்வசனத்தை, இவ்வதிகாரத்தின் 13 வசனத்தின் அடிப்படையில் வாசித்தோமாயின் மணவாளனுடைய கூற்று என்பது தெளிவாகும் நரிகளும், சிறு நரிகளும் திராட்சத் தோட்டங்க கெடுப்பவை. பெரிய நரிகள் திராட்சத் தோட்ட பழங்களைத்தான் கெடுத்துப்போடும். ஆனா குழிநரிகளோ திராட்சத் தோட்டத்தின் பழங்க நோக்கிச் செல்லாது. அதன் பூக்களையும் பிஞ் ளையுமே நோக்கிச் செல்லும். இதனால் திரா தோட்டத்தின் கனிதரும் நிலைமை கெடும். திர சப் பழங்களை நரிகள் கெடுத்துப்போட்டா அதின் பூக்களாலும், பிஞ்சுகளாலும் மீண்டும் களைப் பெற்றுக்கொள்ளலாம். பூக்களும் பிஞ்சுக அற்றுப்போனால் திராட்சத்தோட்டத்தின் கனி மீண்டும் பெறமுடியுமோ?

''நமக்குப் பிடியுங்கள்'' என்றுள்ள சொ இந்நரிகளைப் பிடிப்பதில் மணவாளனும், மண வாட்டியும் இணைந்து செயல்படவேண்டும் பதைப் புலப்படுத்துகின்றன. திராட்சத்தோ தைப் பெரிய மிருகங்களோ அன்றி, பறவை கெடுத்துப்போடாவண்ணம் வேலியடைத்து பது எளிது. குழி நரிகளையும் சிறுநரிகளையும்

காப்பது என்பது அரிது. அதனால்தான் அவை ப் பிடிக்க, சபை மணவாளனோடு இசைந்தும் ணைந்தும் செயல்படவேண்டும்.

செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள லத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; னத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் ப மதியீனமும் அப்படியே செய்யும்'' (பிரசங்கி)

பரிமள தைலத்தைக் கெடுக்கும் செத்த ஈக்கள் நரிகளுக்கும் சிறுநரிகளுக்கும் ஒப்பானவை. ள தைலத்தின் சுகந்த வாசனையை இந்தச் ஈக்கள் நாறிப்போகப்பண்ணும். அதுபோல வாசிகளின் வாழ்வில் காணும் சொற்ப மதியீன அவர்களது நற்சாட்சியைக் கெடுத்துவிடும்.

பெரிய துணிகரமான பாவங்களைச் செய்யா ணம் விசுவாசிகள் எச்சரிப்போடு வாழ்ந்து, கொள்வது எளிது. ஆனால், குழிநரிகளுக்கும் நரிகளுக்கும் ஒப்பான சிற்றின்பங்கள், சிறு சிறு கள, மதியீனங்கள் வாலிபரை மட்டுமன்றி, ாசத்தில் வளர்ச்சியுற்ற முதியோரையும் தாக்கித் ததுவிடும். இவைகள் விசுவாசிகளின் வாழ்க் ின் வேரையுங்கூட விழுங்கிவிடும். ஆகை எச்சரிப்போடு வாழுவீர்களாக.

இஸ்ரவேலின் அரசனான சவுலின் வாழ்க்கை கோர் எடுத்துக்காட்டாகும். சாமுவேல் தீர்க்க தான் பலி செலுத்த வருவதாகவும், அதற்குச் ஏழுநாட்கள்வரை காத்திருக்கவேண்டும் என் ளையிட்டிருந்தார். சவுலோ 6 நாள் 23 மணி டம் வரை காத்திருந்திருந்தான்போலும்! இன் ஒரு நிமிடம் காத்திருக்கத் தயங்கி, ஆசாரியன் மே செலுத்தவேண்டிய பலியினைத் தானே த்தினான். அதன் விளைவு என்ன? இராஜ்ய தையே இழந்தான். இதுபோன்றுதான் இன்றைய விசுவாசிகளும் காணப்படுகின்றனர்.

குழிநரிகளையும் சிறுநரிகளையும் பிடித்து , சபை விசுவாசிகள் நேசருடைய ஒத்தாசை த்தான் தீரவேண்டும். அவரோடு இணைந்தே வேண்டும். அப்போதுதான் விசுவாசிகள் தங்க சொற்ப மதியீனத்தினால் தங்களுக்குள் ஏற்படும் பங்களையும் தீய சுபாவங்களையும் அகற்ற ம்.

(தொடரும்)

பெண்கள் பகுதி

ஒரு கைதி என்றாலும் காரி டென் பூம் அம்மையார் 4. சிவனிங்கன் சிறைதனிலே தொடர்ச்சி

எனினும், நான் பொறுமையாக இருக்கக் கற்றுக் கொண்டேன். *''உங்களை நிந்தித்துத் துன்பப்படுத் திப் பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கிய வான்களாய் இருப்பீர்கள்; சந்தோஷப்பட்டுக் களி கூருங்கள்''* என்று கர்த்தர் தாமே திருவாய் மலர்ந் துள்ளபடி நான் இப்பயங்கர கொடுமையான நாட்க ளில் கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடக்கருதி, எனது கர்த்தரைத் துதித்துப் பாட ஆரம்பித்தேன்.

இயேசு என்ற நாமத்தைக் கேட்டாலே அவர்கள் பாம்புபோல் சீறிவிழுவார்கள். கிறிஸ்தவப்பாட்டு என்றால் நாசி மக்களுக்குச் சிறிதும் பிடிக்காது. ''நீ உடனே உனது பாட்டை நிறுத்துகிறாயா அல்லது உன்னை வெறும் வயிற்றோடு இருட்டுக்கிடங்கிலே தள்ளிக் கொன்று போடட்டுமா?'' என்று எரிந்து, எரிந்து விழுவார்கள்; என்னாலோ பாடாமலும் இருக்க முடிய வில்லை. ஆகவே, அவர்கள் காதுக்குத்தப்பி, இரகசி யமாகப் பாட்டுப்பாடி, கர்த்தரைத் துதித்து வந்தேன்.

நான் சிறைக்கு வந்து, அநேக நாட்கள் கழிந்த பின்னர்தான் முதல் தடவையாக நீராடுவதற்கு அனு மதிக்கப்பட்டேன். அந்த நேரத்தில் நான் சுவிசேஷப் புத்தகங்களை ஒளித்து வைப்பதற்குப் பட்டபாடு கடவுளுக்குத்தான் தெரியும்! என்னோடுகூட நீராடு வதற்காக வந்திருந்த தோழியர் வேதாகமம் நாசி கண் ணில் படாமல் மறைத்து வைப்பதற்குப் பெரிதும் உதவினார்கள்.

ஆறுதல் அளிப்பவை

செஞ்சிலுவைச் சங்கத்தார் அன்பு பொங்க அனுப்பியுள்ள பண்டம் பலகாரங்களைக் கண்ட போது உவகை கொண்டோம். அந்தச் செஞ்சிலு வைச் சங்கத்து வண்டியைக் கண்டாலே எங்களுக்கு ஒரு தனி ஆறுதல்! ஏதோ எங்களுக்காகக் கவலைப் படும் மக்களும் இக்காசினியில் உள் என்பதை அச் செஞ்சிலுவைச் சங்கம் நினைவுறுத்தியது. செஞ் சிலுவைச் சங்க ஊர்தியை உற்று நோக்கியபொழுது யுத்தந்தான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதோ என்றுகூட நினைத்தேன்.

அச்செஞ்சிலுவைச் சங்கத்து வாகனம் எங்கள் வாய்க்கு ருசியான இனிப்புப் பண்டங்களைக்

கொண்டுவந்து கொடுத்து உதவியது. அப்பப்பா! இனிப்புப் பண்டத்துக்காக எவ்வளவு ஆவலோடு இருந்தேன்; இனிப்பு மிட்டாய்களையும், இனிப்பு கேக் வகைகளையும், சுவையான பிஸ்கட்டுகளையும், சின்னஞ்சிறு குழந்தையைப்போல, துண்டு துண்டாய், அணுஅணுவாய், ருசித்து, சுவைத்து உண்டேன். செஞ்சிலுவைச் சங்கம் என்றென்றும் வாழ்க!

மீண்டும் நோய்

தாய், தகப்பனற்ற அனாதைப் பிள்ளையைப் போல் அந்த இருள் செறிந்த கிடங்கில் கிடந்து வேதனைப்பட்டேன். தாங்கொணாக் குளிர் என்னை ஒண்ட ஒண்ட அடித்தது. பசி என்னை வாட்டி வதைத்தது. சிகிச்சையோ கிடைப்பது அரிதாகி விட்டது. காவற்கிடங்கெங்கும் புழுதியும் நாற்றமும் தான்! காற்றுக்கும், ஒளிக்கும் அங்கு இடம் ஏது? சுகாதாரம் என்பதை அச்சிற்றறை ஒருநாளும் கண்டதில்லை. பின்னே நோய் ஏன் அப்பாழ் அறையில் தனி ஆட்சி புரியாது?

கொடிய நோய்வாய்ப்பட்டேன். இருமி, இருமி, இருட்டறையில் கிடந்தேன். பின்னர் இருமலுக்கு அஞ்சி ஒடுங்கினேன். காரணம், இருமும்பொழுதெல்லாம் இரத்தம் கக்க நேரிட்டது. என் செய்வேன்? என்னை ஆதரிப்பதார்? ஆண்டவரை அன்றி என்னை ஆதரிப்பதற்கு அங்கு யாரும் இருந்ததில்லை. ஊடே ஊடே துவாரத்தின் வழியாக, ரொட்டித் துண்டை வீசி எறிந்து செல்வர் வேலைக்காரர். கர்த்தரோ என்னைக் கைவிடவில்லை.

காற்றாடல்

ஏழு வாரம் கழித்தபின்னர், முதல் தடவையாகக் காற்றாடுவதற்கு நான் சிறைச்சாலைத் தோட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். நடப்பதற்கு முடியாதபடி கால்கள் அவ்வளவு தள்ளாடின. புதிதாக நடக்கக் கற்றுக்கொள்ளும் சிறு குழந்தையைப்போல தத்தித் தத்தி, நடந்து சென்றேன்! நடப்பதே ஒரு புதுமையாகத் தோன்றியது. சரளமாக வீசும் காற்றை அனுபவிப்பதே பெரும் வினோதமாக இருந்தது.

ஆங்காங்கு ஒன்றும் இரண்டுமாகப் பூத்திருந்த பூக்களைக் கண்டு களிப்பது பெரும் விருந்து உண்டு களிப்பதுபோல் இருந்தது. ஆ! நீல ஆகாயத்தைக் கண்குளிரக் கண்டேன். கண் எட்டும் தூரம் வரை ஆகாயத்தைக் கண்கொண்டு அளந்து நின்றேன். இயற்கைவனப்பு எனக்கோர் இனிப்புப் பண்டம்போல் காட்சி அளித்தது. இயற்கை அழகை அள்ளி, அள்ளிப் பருகினேன்; வானத்து வனப்பை வாரி, வாரி உண்டேன். ஆகாயத்துக் காற்றை அகங் குளிர குடித்துப் பூரித்தேன்! ஆ! கதிரவனின் ... ஒன்றுகூட விடாமல், அத்தனையும் என் மேனி... ஏற்றேன். இயற்கை அன்னையின் மடிமீது உருண்... புரண்டு மகிழ்ந்தேன். காணக் கிடைக்காத... கண்டுகொண்டேன். காவற்கிடங்கில் ஏது கா... இதயம் விம்மக் காற்றைக் குடித்துக்குடித்துப் பூ... நின்றேன். காற்று எனக்குச் சற்றுச் சுகம் கொடு... காற்றே, உனக்கு நன்றி. காற்றைப் படைத்த ... வுளே, உமக்குக் கோடாகோடி நன்றி.

சிறையில் சிறுவர்

பால்மணம்மாறாத பச்சிளங் குழந்தைகள், ... கள் தாய்மாரோடுகூட சிறையில் அடைக்கப்... ருந்தனர். தந்தையர் அவர்களை விட்டுப் பிரி... பட்டு, வெவ்வேறு சிறைகளில் இடம் பெற்றிரு... னர். தங்கள் தந்தையாரைக் காணாத சின்னஞ்... வர்கள், "அம்மா, அப்பாவிடம் போகவேண்டு... அம்மா, அப்பா எங்கே? அப்பா வரவே மாட்... அம்மா?" போன்ற கதறல்கள் எம் செவி... துளைத்தன. இத்துயரக் குரல்கேட்டு, என் இ... லையும் மறந்து நின்றேன்.

ஊடே, ஊடே இளஞ் சிறார்கள் தங்கள் ... வைக் கனிவாயைத் திறந்து கிறிஸ்துவைப் போற்... பாடும் கீதம் என் செவியில், தேன் வந்து பாய்... போல் இருந்தது; அந்த இனிய, இளங்குரலில்... எத்துணை இன்பம்! மழலை மொழியினர் கிறி... வின் புகழைப் பாடுவதுதான் எவ்வளவு மகிழ்... இயேசு என்ற இனிய நாமத்தை இளைஞர்கள் சி... தனிலே போற்றிப்பாடி, சிறைச்சாலையின் ம... அமைதியை விரட்டும்பொழுதெல்லாம் நான் ... னையே மறந்து இன்பக் கடலில் ஆழ்ந்துவிடுவே... சிறுவர் வாயினால் சிறைச்சாலையில்கூட கிறி... வுக்குத் துதி உண்டாவதைக் கேட்பதென்... யார்தான் மகிழாதிருக்க முடியும்?

(தொடர்...)

வாலிபர்  பகுதி

Forgetting and Remembering

Life is a harmonious blending of two ... posing principles. They are the principles of ... getting and remembering. These two princ... are diametrically opposed to each other; ye... are vital. One is meaningless without the ... The simple fact of implementing the cu... combination of these principles helps a be... to reach heights of spiritual life.

...ciples of forgetting

...Phil.3:13 renders thus: "*... forgetting those* ...*which are behind and reaching forth unto* ...*things which are before.*" Forgetting the ...nities that we suffer at other's hands is a ...e. Ps.41:9 says, "*yea, mine own familiar* ...*in whom I trusted, which did eat of my* ...*hath lifted up his heel against me.*" This ...reference to Judas Iscariot who betrayed ...with a customary kiss. According to II ...16:5-7, Shemei, belonging to the family ...house of Saul, cursed king David as he ...along with his men. Shemei said, "Come ...ou bloody man and thou man of Belial." ...en hurled stones at David. The servants ...vid asked him to permit them to kill the ...ant. But David with dignified bearing said, ...him curse; for the Lord had bidden him." ...when we forget these malicious acts and ...them behind, shall we be able to press to- ...the mark for the prize of the high calling ...d in Christ Jesus (Phil.3:14). The pursuit ...mark for the prize of high calling of God ...nds our absolute devotion. Here, nothing ...be allowed to hamper the runner's ...ess. Jesus has set us free from every weight ...ving us forgiveness of the past, help in the ...nt and assurance for the future.

...We stand together at the gateway of an- ...year. As we face the coming days of a ...year, we will know that each day brings ...aster's return nearer. So, let us be careful ...aside every weight and press towards the ...with singleness of heart, looking unto ...Heb.12:1,2 speak about the cloud of wit- ...s referring to the galaxy of heroes of faith ...oned in chapter eleven. The passage is ...iscent of the athletic events of ancient ...e and Rome. Warm-up weights are typi- ...sins which are to be laid aside in the se- ...competition of life. Human life is a race ...ich the believer is asked to run with pa-

...iple of Remembering

...emember the divine Leader with grati- ...Deu.32:12,13 express the lofty precept ...y, the Lord alone did lead him (Israel) ...ere was no strange god with him. The ...ed him to the high places of the earth, that he might eat the increase of the fields; and he made him suck honey out of the rock and oil out of the flinty rock.

Deu.8:2,3 lend lustre to the principle of remembering. God constantly tries to bring His children into an obedient dependence upon Him by reminding them of the dangers and difficulties to which they had been exposed and from which he delivered them. In their wilderness wandering, God provided a time for testing and discipline in order to remove all self-sufficiency and caused them to turn back to a dependence upon Jehovah. In His wisdom God knew what was in their hearts, but allowed them to choose to obey or disobey His commandments. Ultimately, He wanted to do good to them.

According to Deu.8:3 God humbled the Israelites in the wilderness, letting them suffer hunger. Miraculously He supplied them with manna from heaven. The lesson that we learn is that in the absence of all natural means, God would sustain us even by His Word. The growing doctrine of the Word and its divine origin is obvious here. The Word of the Lord is likened to bread that is manna (Num.11:6). Manna is described as a small, round, flat, fine flake-like substance like coriander seed, and it tasted like honey. If allowed to stand overnight, it bred worms. Therefore, the Israelites were to gather only one day's supply at a time, except on the sixth day.

May the Lord help us to adopt principles of forgetting and remembering that we might continue to march forward, unimpeded and undaunted.

சிறுவர் பகுதி

ஆறுதலின் தேவன்

"*நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்*" (ஏசாயா 51:12).

கிறிஸ்துவுக்குள் அன்பான பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இம்மாதம் காலாண்டுத் தேர்வு எழுதி முடித்து, வரும் விடுமுறை நாட்களைச் சந்தோஷமாய்க் கழிக்க ஆலோசனை செய்துகொண்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். ஆனாலும், உங்களில் ஒரு சிலர், தங்களது வீட்டில் நிலவும் அமைதி

யற்ற சூழ்நிலையினால் கலங்கி, "ஏன் இந்த விடுமுறை" என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கலாம். இந்தக் கதையின் மூலமாக ஆறுதலின் தேவனாகிய இயேசு கிறிஸ்து நிச்சயமாய் உங்கள் கண்ணீரைத் துடைத்து ஆறுதல்படுத்துவார்.

இன்னும் தேர்வு முடிய அரைமணி நேரமே இருந்தது. விடுமுறையை எதிர்பார்த்துப் பிள்ளைகள் கலைந்து செல்லவிருந்ததால், மகிழ்ச்சியுடன் ஏகக் குரலில் விடுமுறையைக் கழிக்கும்விதம் குறித்து உரையாடிக்கொண்டிருந்தனர். அவ்வேளையில் வகுப்பாசிரியர் உள்ளே வந்து, "Happy holidays! பிள்ளைகளே, இந்தக் காலாண்டுத் தேர்வில் யார் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கப்போகிறார்களோ அவர்களுக்கு விடுமுறை முடிந்து வந்ததும், ஒரு surprise" என்று ஆசிரியர் சொல்லும்போது, பள்ளி இறுதி மணி அடித்தது. அத்துணை மாணவர்களும் குதூகலத்துடன் கலைந்து சென்றனர்.

இரட்டையரான மோசஸ், தாமஸ் இருவரும் ஏழாம் வகுப்பு மாணவர்கள். இருவரும் படிப்பில் சுட்டி. ஆகவே, எப்பொழுதும் முதலாம் இரண்டாம் இடத்தை, மற்றொருவருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ஆனால், இந்தக் காலாண்டு பரீட்சையில் என்ன நேரிடுமோ என்று பயந்திருந்தனர். ஏனெனில், தங்கள் வீட்டில் காணப்பட்ட அமைதியற்ற சூழ்நிலையின் காரணமாக, அவர்கள் சரிவர பரீட்சைக்கு ஆயத்தமாக முடியவில்லை.

எப்படியும் முதல் மூன்று இடங்களுக்குள் வந்துவிடலாம் என்ற நம்பிக்கையிருந்ததால், உற்சாகத்துடன் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் பெற்றோர் இருவரும் அலுவலகம் செல்வதால் அவர்களிடம் தங்களது வீட்டின் சாவி ஒன்று எப்பொழுதுமே கையில் இருக்கும். ஆகவே சாவியைக் கையில் எடுத்துக்கொண்டு கதவைத்திறக்க ஓடி வந்தனர். கதவின் அருகே வந்த இருவரும், அப்படியே அதிர்ச்சியுற்று நின்றனர். அவர்களுக்கு முன்பாகக் கதவு திறந்திருந்தது. உள்ளேயிருந்து கோபமும் எரிச்சலும் நிறைந்த வார்த்தைகள் வெளியே வந்தன. நிலை குலைந்துபோன மோசசும், தாமசும் செய்வதறியாமல் திகைத்து நின்றனர்.

பின்பு, தங்களைத் திடப்படுத்திக்கொண்டு உள்ளே சென்றனர். பிள்ளைகளைக் கண்ட பெற்றோர் இருவரும் உரத்தக் குரலில் அவர்களோடு பேசத் தொடங்கினார்கள். மோசசும், தாமசும் எதும் புரிந்துகொள்ள முடியாமல் அழுதுகொண்டே உள்ளே சென்றனர். அவர்களின் அம்மா கோபத்தின் மிகுதியினால் சமையல் அறையின் பாத்திரங்களை உருட்டிக்கொண்டிருந்தார்கள். பசியோடு பள்ளியிலிருந்து வந்த பிள்ளைகளுக்கு எந்த ஆகாரமும் கொடுக்கவில்லை. தண்ணீரை மொண்டு குடித்துவிட்டு, இருவரும் முன்அறைக்கு வந்து, "C... network" பார்க்க, T.V.யின் முன்பு அமர்ந்த...

உடனே அவர்கள் அப்பா, "டேய்! ... தொலைக்காட்சிப்பெட்டியை என் அனுமதி... தொடக்கூடாது. நான் என்ன நிகழ்ச்சிகளை... அனுமதிக்கிறேனோ அவைகளை மட்டுமே ... பார்க்கவேண்டும். இப்பொழுது போய்ப் படி...' என்று கோபமாய்ப் பேசினார்.

இதைக் கேட்ட அவர்களது தாயார், "... தொலைக்காட்சியை நிறுத்தவேண்டாம்; ... T.V. பார்க்கலாம். நான் முழு அனுமதி தரு..." என்றார்கள் கோபமாக. செய்வதறியாது இ... படுக்கை அறைக்குள் சென்று அழுதுகொ... கதவை அடைத்துகொண்டனர்.

இந்த அனுபவம் அவர்களுக்குப் பு... கடந்த பத்து வருடங்களாக இதை அநு... கண்டு கலங்கிகொண்டிருந்தனர். அவர்கள் ... பாட்டி எவ்வளவோ ஆலோசனை கூறி... னில்லை. சபையின் ஊழியர்கள் அநேக... அவர்களை அநேக முறை சமாதானப்படுத்... தார்கள். ஆனாலும், ஒரு பூரண விடுதலை ... ளுக்குக் கிடைக்கவில்லை.

இருவரும் அரசாங்க உத்தியோகத்தில் ... வர்கள். ஆகவே, ஒருவருக்கொருவர் விட்டுக்... பது என்பது இயலாத காரியமாய்க் காண... பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை ... திருந்தும் அவர்கள் ஒருவருக்கொருவர் வி... கொடுக்க மனமில்லாதிருந்தனர். வருட... உருண்டோடினும் இந்நிலை மாறாமல் இருந்... தங்கள் வீட்டில் எப்பொழுது புயல் வீசப்போ... என்ற பயத்திலும் கலக்கத்திலுமே மோசசு... வாழ்ந்து வந்தனர்.

ஆனாலும், இந்த முறை எப்பொழுது... அம்மாவையோ, அப்பாவையோ சார்ந்து... இயேசு அப்பாவையே சார்ந்துகொள்ளவே... என்று முடிவு செய்தனர் பிள்ளைகள். அ... நிறுத்தி, படுக்கையில் எழுந்து உட்கா... ஜெபிப்பதற்காக முழங்காலிட்டனர். அ... தாமஸ் எழுந்துபோய் வேதாகமத்தை எடு... தான். "ஏதாவது ஆறுதலான சங்கீதம் ப... என்று வேதாகமத்தை திறந்தான். அவனு... களில் ஏசாயா 50:12 இல், "*நான், நானே உ... ஆறுதல் செய்கிறவர்*" என்னும் வார்த்தை... பட்டன. அதைப் படித்துவிட்டு, இருவ... மிட்டு அழத்தொடங்கினர். இயேசுவின் அ... கள் இருவரின் உள்ளத்தையும் நிரப்பிற்... சத்தமாய் ஜெபிக்க ஆரம்பித்தான்.

இயேசு அப்பா! உம்முடைய அன்பினால் எங் நிறைந்து, உம்முடைய வசனத்தினால் ஆறு ததியதற்காக நன்றி. எங்களுக்கு அருமை பெற்றோரைக் கொடுத்திருக்கிறீர். அதற்காக ஆயினும் அவர்களுக்கு ஞானத்தைத் தாரும். ஒருவர் புரிந்துகொள்ளவும், ஒருவருக் விட்டுக் கொடுக்கவும் உதவி செய்யும். எங்களால் தாங்க முடியாது, இயேசு அப்பா! யை நிறுத்திப்போடும்; '*நான், நானே உங்க ஆறுதல் செய்கிறவர்*' என்று சொன்னீரே! முதல் எங்கள் பெற்றோரின் சண்டைகளை சமாதானத்தைக் கட்டளையிடும் என்று ரோடு ஜெபித்தான்.

த்தோடு மோசசும், தாமசும் ஜெபித்து ருந்தபடியால் படுக்கையறையின் கதவைத் அவர்கள் பெற்றோர் உள்ளே வந்ததை வில்லை. மோசசின் உருக்கமான ஜெபம், இரு இருதயத்தையும் உருக்கிற்று. நெகிழ்ந்த உள் இருவரும் பிள்ளைகளை அணைத்துக் னர்.

மோசஸ், தாமஸ்! எங்களை மன்னித்துவிடுங் பிள்ளைகளாகிய உங்கள் உணர்ச்சிகளைப் கொள்ளாமல், எங்கள் உரிமைகளுக்காக இத் வருடங்களாக சண்டையிட்டது எவ்வளவு என்பதைப் புரிந்துகொண்டோம். இனி, ஒரு இவ்வாறு சண்டையிடமாட்டோம். எங் மாபுங்கள்'' என்று கண்ணீர் மல்கக் கூறினார் து தந்தை.

பிள்ளைகளே! என்னையும் மன்னித்துவிடுங் சண்டையிடமாட்டேன் என்று உறுதிகூறு என் இருதயத்தை இயேசு கிறிஸ்து தம் அன் நிரப்பிவிட்டார். அவர் ஒருவரே நமக்கு ஆறு செய்கிறவர் என்பதைப் புரிந்துகொண்டேன்'' கண்ணீர் ததும்பக்கூறினார்கள் அவர்கள் மோசசும், தாமசும் இயேசு அப்பாவிற்கு நன்றி தெரிவித்தனர்.

இந்தக் கதையை வாசிக்கும் பிள்ளைகளே! ஒரு உங்கள் குடும்பங்களிலும், இப்படிப்பட்ட சூறை புயல் வீசி உங்களைக் கலங்கப்பண் உங்கள் எதிர்காலமே பாதிக்கப்பட்டுவிடும் நீங்கள் எண்ணலாம். சோர்ந்துபோகாதிருங்

எல்விதமான ஆறுதலின் தேவனாகிய இயேசு *நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்* என்று சொல்லி, உங்கள் குடும்பங்களில் கொண்டிருக்கும் புயலை அதட்டி, சமாதானத் கட்டளையிடுவார். ஏற்றவேளையில் உங் விடுவித்து, அமைதியைக் கொடுப்பார். விசு கள், ஆறுதலைப் பெற்று ஆனந்தமடையுங்

சாட்சிப் பகுதி

16 ஆண்டுகளுக்குப்பின் கிடைத்த வேலை

என் பெயர் ரெஜினா. எனக்கு மூன்று பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் உண்டு. நான் கே.எம்.கார்டன், முதல் தெருவில் வசித்து வருகி றேன். எனது கணவர் 1991 ஆம் ஆண்டு, காலமா னார். அந்நாட்களில் நாங்கள் இயேசுவை அறியாமல் வாழ்ந்து வந்தோம்.

என் கணவர் குடிநீர் வடிகால் வாரியத்தில் வேலை செய்யும்போது இறந்துபோனார். நாங்கள் குடும்பமாக 2002 ஆம் ஆண்டு, இயேசுவை ஏற்றுக் கொண்டு, இந்தச் சபையில் ஞானஸ்நானம் எடுத்து, சபையின் ஐக்கியத்தில் வாழ்ந்துவருகிறோம்.

எனது கணவருடைய வேலையை அரசாங்கம் எனக்குத்தரும்படி, நான் நமது சங்கிலி ஜெபத்தில் கலந்து, ஜெபித்துவந்தேன். இதற்காக, கடந்த வரு டம் நடந்த 40 நாட்களின் உபவாச ஜெபத்திலும் கலந்துகொண்டு, ஜெபித்துவந்தேன்.

அந்த 40 நாட்களின் உபவாச ஜெபத்தின் 26 ஆம் நாளில், நான் வேலையில் சேருவதற்கான ஆவ ணங்களை அனுப்பும்படியான உத்தரவை அரசாங் கத்திடமிருந்து பெற்றேன்.

கடந்த டிசம்பர் மாதம் 20 ஆம் தேதி, வேலை யில் சேருவதற்கான அரசு ஆணை கிடைக்க, கர்த்தர் உதவிசெய்தார். அதற்கு முந்தின நாள், எனது மூத்த மகளின் திருமண நிச்சயமும் நடந்தேற, கர்த்தர் கிருபை செய்தார். என் கணவர் இறந்து 16 ஆண்டு களுக்குப் பின்னர், நடக்க முடியாத ஒரு சம்பவத்தை நடத்தித்தந்த தேவனுக்குக் கோடா கோடி ஸ்தோத் திரம்.

கருணை அடிப்படையில் அரசு வேலை கிடைக்கச் செய்த என் அருமை தகப்பன் இயேசு வுக்கு, என் இருதயத்தின் ஆழத்திலிருந்து கண்ணீ ரோடு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், அல்லேலூயா.

ரெஜினா

சபையின் செய்திகள்

1. அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபை ஊழியர்களின் கூடுகை

2008, செப்டம்பர் திங்கள் 2 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலை மைச் சபை ஊழியர்களின் கூடுகை கூட்டப்பட்டது.

தலைமைப் போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள் துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தினார். பின்னர், அந்நாள் ஜெபநாளாகவே நடத்தப்பட்டது.

கடைசியில் தலைமைப் போதகர், லூக்கா 1:17 ஐ மையமாகக்கொண்டு, ஐந்து குறிப்புக்களைக் கூறினார். சத்துருக்களின் கைகளிலிருந்து விடுதலை உண்டாகும்; உயிரோடிருக்குமட்டும் ஊழியர்கள் பயமில்லாமல் வாழ்வர்; கர்த்தருடைய சமுகத்துக்கு முன்பாக ஊழியர் வாழவேண்டும்; பரிசுத்தத்தோடும் நீதியோடும் ஊழியர்கள் வாழவேண்டும்; அப்போது கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுமாறு தேவன் கட்டளையிடுவார் என்றுள்ள குறிப்புகளை அவ்வசனத்தின் வாயிலாக விளக்கினார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்னர், தலைமைப் போதகரின் ஜெபத்தோடு கூட்டம் ஆசீர்வாதத்துடன் முடிவடைந்தது.

2. அப்போஸ்தல கிறிஸ்தவ கிளைச் சபை போதகர்களின் மனைவிமார்களின் கூடுகை

2008, செப்டம்பர் திங்கள் 8 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ கிளைச் சபை போதகர்களின் மனைவிமார்களும், தலைமைச் சபை பெண் ஊழியர்களும் ஒருங்கே இணைந்து கூடினர்.

போதகர் ஆனந்த் அவர்கள், துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தினார். பின்னர், போதகர் தாமஸ்ராஜ் அவர்கள், நீதிமொழிகள் 31:23 ஐ மையமாகக்கொண்டு, மனைவிமார்களினிமித்தம் புருஷன்மார்கள் புகழப்படுகின்றனர் என்ற கருத்தில், ஆறு குறிப்புகளைப் பேசினார்.

பெண்கள், சாட்சியுள்ளவர்களாகவும் (நீதி.31:10), நம்பிக்கைக்குரியவர்களாகவும் (நீதி.31:11), பரிசுத்தமுள்ளவர்களாகவும் (நீதி.31:13), விழிப்புடையவர்களாகவும் (நீதி.31:15), சிறுமைப்படுகிறவர்கள்மேல் சிந்தையுடையவர்களாகவும் (நீதி.31:20), தங்கள் நாவை அடக்குகிறவர்களாகவும் (நீதி.31:26) இருத்தல்வேண்டும் என்று விளக்கமாகப் போதித்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்னர், தலைமைப் போதகரது ஆசீர்வாத ஜெபத்தோடு, மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் ஆசீர்வாதத்தோடு முடிந்தது.

News

கூடங்குளத்தில் மேலும் 6 அணு உலைகள் நிறு... அணு ஒப்பந்தத்தால் தமிழகத்துக்கு முத... பயன்

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குள... 1000 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொ... ரஷ்ய அணு உலைகள் ஏற்கனவே அமைக்க... உள்ளன. அணு ஒப்பந்தத்தால் இதே உற்ப... திறன்கொண்ட மேலும் 6 அணு உலைகளை ... முடியும்.

ரஷ்ய அரசு மேலும் 2 அணு உலைகளை நி... னஞ்செய்ய வாக்குறுதி அளித்துள்ளது. இத... பணிகளும் நடந்து வருகின்றன என்பது குறி... தக்கது. இந்த மின் திட்டங்களில் உற்பத்தி ... கிய பிறகு, எதிர்காலத்தில் மின்வெட்டு இருக்...

கூடங்குளத்தில் ரஷ்ய உதவியுடன் ரூ... கோடி செலவில் அணு மின் திட்டம் செயல்படு... பட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் மின்... துக்கு யூனிட்டுக்கு ரூ.2.30 முதல் ரூ.2.40 ... கட்டணம் நிர்ணயிக்கலாம் என்று அதிகாரி... கணித்துள்ளனர்.

தினகரன் 10.09.2...

படிப்படியாக எத்தனால் பயன்பாடு முக்கி... முடிவு

எண்ணெய் இறக்குமதியை நாடு அதிக... வில் சார்ந்துள்ளது. இதைக் குறைக்க வகைசெ... தேசிய எரிபொருள் கொள்கைக்கு மத்திய அ... சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்படி, 20... வீத எத்தனால் கலந்த பெட்ரோல், காட்டாமண... எண்ணெய் கலந்த டீசலை 2017 ஆம் ஆண்டுக்... விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்...

தற்போது 5 சதவீத எத்தனால் கலந்த பெ... ரோல் விற்கப்பட்டுவருகிறது. அடுத்த மாதம் மு... எத்தனாலில் கலக்கப்படும் பெட்ரோலின் அ... இருமடங்காக அதிகரிக்கப்படும்.

அதே நேரத்தில், காட்டாமணக்கு எண்ணெ... கலந்த டீசலை விற்பனை செய்வதுகுறித்து ஆ... செய்யப்பட்டு வருகிறது. தவிர, இரட்டை வி... வரி வராத நடைமுறையும் உருவாக்கப்படும்.

தேசிய பயோ எரிபொருள் வாரியத்தை அ... கவேண்டும் என, சரத்பவார் தலைமையில... அமைச்சர்கள் குழு பரிந்துரை செய்தது. அ... பதிலாக, தேசிய பயோ எரிபொருள் ஒருங்கிண... கமிட்டியை, பிரதமர் தலைமையில் அ... அமைச்சரவை ஒப்புதல் கொடுத்துள்ளது.

தினமலர் 12.09...

சோதனைகள்

(கடந்த மாதம் வெளியிடப்பட்ட 'Trials' இன் தமிழாக்கம்)

நாம் எதிர்பாரா சோதனைகள் நமக்கு வரினும்,
அனுதினமும் இறைவன் நமக்கு உதவிசெய்வார்.
அவர்மேல் மட்டுமே நாம் நம்பிக்கை கொண்டால்,
அவர் அன்பின் ஒளி
என்றுமே மங்காது.
அவர் உன்னை மறந்துவிட்டார் என்று
ஒருபொழுதும் எண்ணாதே.
சிலவேளைகளில்
ஓரிரண்டு பரீட்சைகள் நமக்குத் தேவை.
ஏனெனில், எவ்வகையிலாவது நாம் பரீட்சிக்கப்படாவிடில்
நம் சகோதரனுக்கு
உதவவே முடியாத நிலை ஏற்படும்
எளிதான பாதையை
இறைவனிடம் கேளாதே.
உன் பாரங்களைச் சுமக்க
பெலனை மட்டும் கேள்.
உன் எல்லாத் துக்கங்களிலும்,
இறைவன் உன்னுடனிருப்பதைக் காண்பாய்.
அவர் அன்பும் தயவும் உள்ளவர்.
உன் சோதனைகள் யாவும் நீங்கினபின்,
"நானுங்கூட அங்கிருந்தேன்" என்று நீ கூறமுடியும்.
ஏனெனில், நீ சந்திக்கும் யாரேனும் ஒருவர்
உன் அடிச்சுவடுகளில் நடப்பதற்காக
இறைவனைத் துதிக்கும் தருணங்கள் வரும்.

Reg. Number TN/CCN/203/06-08. Licence to the post under WPP No.TN/CCN/85/06-08
Regd. Under Regis. of News paper for India No.(1)1295/57, Posting date 29th & 30th of every month.
Date of Publication : monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai-600 008.

ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்

Book - Rs.5

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சிகள்
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. இயேசுவின் அன்பு (சாட்சிகள்)
6. எஸ்தர்
7. இயேசு கிறிஸ்து மாறாதவர்
8. ஒளி வீசும் சாட்சிகள்
9. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
10. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
11. ஆவிக்குரிய வேதசத்தியங்கள்
12. தசமபாகம் கர்த்தருக்குரியது
13. Jesus Met Me in Jail
14. Spiritual Truths from the Bible
15. Tithe Belongs to God

Book-Rs.10/-

16. அநாதி கிருபை
17. கல்வாரி மரம்
18. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
19. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
20. நீதிமான்கள்
21. கிறிஸ்துமஸ் செய்திகள்
22. இயேசு உயிர்த்தெழுந்தார்
23. நீதியின் சூரியன்
24. பரதேசிகளாகிய நாம்
25. கிறிஸ்துவ குடும்பம்
26. நித்திய பிரதான ஆசாரியர்
27. சபை சபைதானா?
28. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
29. புத்தாண்டு தேவசெய்திகள்
30. விழித்திரு
31. சிலுவைக்கு அப்பால்
32. வணக்கம்
33. இரட்சிப்பின் சாட்சிகள்
34. ஜீவனுள்ள சாட்சிகள்
35. அற்புத சாட்சிகள்
36. சாட்சிகள்
37. எரி நரகத்திற்குத் தப்பினேன்
38. மாபெரும் மாற்றம்
39. நன்றியுள்ள சாட்சிகள்
40. கல்லூரியில் அற்புதங்கள்
41. நற்செய்தி கதைகள்
42. தீப ஒளி
43. வழிகாட்டும் கதைகள்
44. அந்தக் கடிதங்கள்
45. அந்த மயில்கள்
46. கனமான ஊழியம்
47. வெளிச்சம்
48. ஆத்தும நேசர்
49. ஐக்கியம்
50. கொடி
51. இன்னும் சந்தேகமா?
52. அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
53. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
54. மேய்ப்பரின் அறிவுரைகள்
55. முதலாம் ஆதாம்
56. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
57. நீரே என் மேய்ப்பர்
58. தேவ ஊழியம்
59. உத்தம ஊழியன்
60. Eternal Grace
61. The Star
62. The New Year
63. Spiritual Questions
64. The Timely Warning
65. The Blessing
66. Your Response to the Cross
67. The Power of Prayer
68. Springs in the Valley
69. A Narrow Escape from Hell

Book-Rs.15/-

70. ஏழு வார்த்தைகள்
71. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
72. இயேசு கூறின உவமைகள்
73. அதிசயமான தேவகிருபை
74. Amazing Grace of God

Book - Rs.20/-

75. என் நேசரின் சத்தம்
76. தேவனுடைய வாக்குத்தத்தச் செய்திகள்
77. வாக்குத்தத்த செய்திகள் 2004
78. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 1
79. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 2
80. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
81. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
82. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 1
83. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 2
84. ஒருவருக்கொருவர்
85. Successful Ministers of the Lord
86. Messages of God's Blessings 1
87. Messages of God's Blessings 2

Book - Rs.25/-

88. A Good Soldier of Jesus Christ
89. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
90. வாக்குத்தத்தச் செய்திகள் 2005
91. வாக்குத்தத்தச் செய்திகள் 2006
92. தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள்
93. வாக்குத்தத்தச் செய்திகள் 2007
94. ஜெபத்தின் வல்லமை

Book - Rs.30/-

95. நல்ல போர்ச்சேவகன்
96. ஆவிக்குரிய தேவசெய்திகள்

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி

24hrs Prayer line: 26625815

Herald of Deliverance
Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622388/26622775 website:www.acaprayerhouse.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acaprayerhouse.org
Printed by Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell 9841429079